# குறை நிரப்பு துணை அறிவித்தல்

# ஹற்றன் நஷனல் வங்கி (பதிவு இலக்கம் PQ 82) - 51 ஆவது வருடாந்த பொதுச்சபைக் கூட்டம்

நாட்டில் தற்போது நிலவும் சூழ்நிலை காரணமாக அதிகாரிகளினால் வழங்கப்பட்டுள்ள சுகாதார மற்றும் பாதுகாப்பு வழிகாட்டல்களை கருத்திற் கொண்டு வங்கியின் 2019 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கை மற்றும் 2020 பெப்ரவரி 20 திகதியிடப்பட்ட வங்கியின் 51வது வருடாந்தப் பொதுச்சபைக் கூட்டம் பற்றிய அறிவித்தல் மற்றும் பங்கு ஒன்றுக்கு ரூ.3.50 ரொக்கப் பங்குலாபத்தையும், ரூ.3.50 பங்குசான்றிதழ் பங்குலாபத்தையும் உள்ளடக்கி மொத்தமாக ரூ.7.00 இனை ஹற்றன் நஷனல் வங்கியின் இறுதிப் பங்குலாபமாக முன்மொழியும் விபரங்களை உள்ளடக்கி 2020 மார்ச் 5 திகதியிடப்பட்டு பங்குதாரர்களுக்கான சுற்றறிக்கை மற்றும் குறித்த வருடாந்தப் பொதுச்சபைக் கூட்டத்தினை ஒத்திவைப்பதற்காக கொழும்பு பங்குச் சந்தைக்கு மேற்கொள்ளப்பட்ட 2020 மார்ச் 20 திகதியிடப்பட்ட அறிவித்தல் என்பனவற்றை தங்கள் கவனத்திற்கு கொண்டுவருகின்றோம்.

மேற்போந்த ஆவணங்கள் http://www.hnb.net என்ற எமது வலைத்தளத்திலும் கொழும்பு பங்குச்சந்தையின் வலைத்தளம் http://www.cse.lk/home/market இலும் கிடைக்கும்.

2020 ஏப்ரல் 23 ஆம் திகதி கூட்டப்பட்ட இயக்குநர் சபைக் கூட்டத்தில், இயக்குநர் சபை பின்வரும் முறையில் 2020 மே மாதம் 29 ஆம் திகதி வருடாந்த பொதுச்சபைக் கூட்டத்தை நடத்துவது என முடிவு செய்தது.

A. **மீள் அட்டவணையிடப்பட்ட 51 ஆவது பொதுச்சபைக் கூட்டத் திகதி**

(1) 2020 பெப்ரவரி 20 ஆம் திகதியிடப்பட்ட கூட்ட அறிவித்தலில் சிந்திக்கப்பட்ட வணிக நடைமுறையை நடத்தும் முகமாக முற்பகல் 10 மணிக்கு கொழும்பு -10 டி.பி.ஜயா மாவத்தை இல.479 இல் உள்ள எச்.என்.பி கோபுரம், 22வது மாடியில் உள்ள கேட்போர் கூடத்தில் 2020 மே மாதம் இருபத்து ஒன்பதாம் (29) திகதி வங்கியின் ஐம்பத்து ஓராவது (51) வருடாந்த பொதுச்சபைக் கூட்டம் நடைபெறும் என இத்தால் அறிவித்தல் தரப்பட்டுள்ளது.

(2) பொருத்தமான சட்டவிதிகளுக்கு ஏற்பவும், கொழும்பு பங்குச் சந்தையின் வழிகாட்டலின்படியும் இக்கூட்டம் நடைபெறவிருக்கின்றது. இவ் வருடாந்தப் பொதுக் கூட்டமானது, 2020 ஆம் ஆண்டு மே 29 திகதியில் எவ்வித ஊரடங்கும் நடைமுறையில் இருக்காது என்ற ஊகத்தின் அடிப்படையிலும் கூட்டங்களை நடாத்துவது தொடர்பில் அதிகாரிகளினால் எவ்வித கட்டுப்பாடுகளும் இருக்காது என்ற ஊகத்தின் அடிப்படையிலும் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.

(3) பொதுச்சுகாதாரத்தை பாதுகாக்கப்படவேண்டிய நலன் கருதியும் அதிகாரிகளினால் வழங்கப்பட்ட வழிகாட்டல்களுக்கு ஏற்பவும் வங்கியின் 51 ஆவது வருடாந்த பொதுச்சபைக் கூட்டம் பங்கேற்பவர்களின் சரீரம்சார் ஒன்றுகூடல் மற்றும் ஒலி (ஓடியோ) அல்லது ஒலி மற்றும் காட்சி வழிமுறைகள் மூலம் பின்வரும் முறையில் நடைபெறும்.

(i) தவிசாளர், இயக்குனர் சபையின் குறித்த உறுப்பினர்கள், நிர்வாக இயக்குனர், நிறுவன செயலாளர், வங்கியின் கணக்காய்வாளர் மற்றும் சட்ட ஆலோசகர் ஆகியோர் பந்தி (1) இல் குறிப்பிட்ட இடத்தில் கூடுவார்கள்.

(ii) வங்கியினால் வழங்கப்பட்ட பங்குக்கூறுகளில் 20 சதவீத பங்குகளை கொண்டிருக்கும் பங்குதாரர்கள் அல்லது பங்குதாரர்களில் ஆகக்கூடுதல் 50 பங்குதாரர்கள் இவர்களில் எதுகூடுதலோ அவர்கள் (வருடாந்த பொதுச்சபைக் கூட்டத்தில் பங்குபற்ற வங்கியில் பதிவு செய்துகொண்டவர்களில் முதலில் வந்தவர்கள் என்ற அடிப்படையிலும்) தாங்களாகவோ பதிலீட்டாளர் மூலமோ சரீரம்சார் ஒன்றுகூடல் மற்றும் கூட்டத்தில் பங்குபற்ற அனுமதிக்கப்படுவார்கள்.

(iii) மேலே (ii) இல் கூறப்பட்டவாறு பதிவுசெய்யப்பட்டிருந்தும், மேலே (i) கூறப்பட்ட இடத்தில் நடைபெறவுள்ள வருடாந்தப் பொதுச் சபைக் கூட்டத்திற்கு நேரடியாகப் பங்குபற்ற சந்தர்ப்பம் கிடைக்காத பங்குதாரர்கள் மற்றும் கூட்டத்திற்கு ஒலி அல்லது ஒலி மற்றும் காட்சி ஊடகங்கள் ஊடாக தனித்த இடத்திலிருந்து பங்குபற்ற விரும்பும் பங்குதாரர்கள், மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் அணிகளுக்கான கூட்டங்கள் நடாத்தப்படும் ஊடகங்கள் மூலம் பொதுச் சபைக் கூட்டத்தில் பங்குபற்றலாம். இவ்வாறு ஒலி மற்றும் காட்சி ஊடகங்கள் மூலம் பொதுச் சபைக் கூட்டத்தில் பங்குபற்ற விரும்பும் பங்குதாரர்கள் தமது மின்னஞ்சல் முகவரியை பொதுச் சபைக் கூட்டம் ஆரம்பமாகும் நேரத்துக்கு 24 மணி நேரத்துக்கு முன்னதாகவே info@hnb.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைப்பதன் மூலம் கூட்டத்துக்கு இவ் ஊடகங்கள் மூலம் உள்நுழைவதற்கான விபரங்களை பெற்றுக்கொள்ள வசதியாக இருக்கும்.

(4) பொதுச்சபைக் கூட்டத்தில் தொலைவிலிருந்து ஒலி அல்லது ஒலி மற்றும் காட்சி வழிமுறைகள் மூலம் பங்குபற்றும் சகல தனிப்பட்ட நபர்களும் வாக்களிப்பு நேரத்தில் தமது அடையாளத்தை நிரூபிக்க வேண்டும் என கோரப்படுகின்றனர். மேலும் பொதுச்சபைக் கூட்டத்தின்போது பங்குதாரர்களின் கருத்துரைக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தில் உரையாற்றும் வேளை தவிசாளரால் நெறிப்படுத்தப்பட்டபடி சகல தனிப்பட்ட நபர்களும் தம்மை அடையாளப்படுத்த வேண்டும். ஒரு பங்குதாரராக அல்லது பதிலீட்டாளராக அடையாளப்படுத்தும் நோக்கத்திற்காக அந்தத் தருணத்தில் அவர்கள் தமது பெயர் மற்றும் முகவரி ஆகியனவற்றை தரவேண்டும் எனக் கோரப்படுகின்றனர்.

(5) நாட்டில் நிலவும் சூழ்நிலை காரணமாக இந்த அறிவித்தலை தபாலில் சேர்க்க முடியாது போகலாம். அப்படியாயின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் மொழிகளில் தினசரிப் பத்திரிகையில் மற்றும் சூழ்நிலைகள் சாதகமாயின் வர்த்தமானியிலும் இந்த அறிவித்தல் பிரசுரிக்கப்படும். கொழும்பு பங்குச்சந்தையின் வலைத்தளம் (https://www.cse.lk/home/market) மற்றும் வங்கியின் வலைத்தளம் (https://www.hnb.net) முகநூல் ஆகியவற்றிலும் வாக்களிக்கும் மற்றும் வாக்களிக்காத பங்குதாரார்களுக்கான தனியான பதிலீட்டாளா் வடிவப்பத்திரத்துடன் அறிக்கை பிரசுரிக்கப்படும்.

(6) கூட்டத்துக்கு நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்கு 24 மணி நேரத்துக்கு முன்பாக வங்கிக்கு வந்து சேரும் வகையில் HNB வலைத்தளத்தில் (https://www.hnb.net) கொடுக்கப்பட்ட பதிலீட்டாளர் வடிவப்பத்திரத்தை உரியமுறையில் நிரப்பி பங்குதாரர்கள் அதனை info@hnb.lk இற்கு அனுப்பி வைக்க வேண்டும். கூட்ட நேரத்திற்கு குறைந்தபட்சம் 24 மணி நேரத்திற்கு முன்னதாக பதிலீட்டாளர்களை திரும்பப் பெறுவதற்கான அறிவித்தலை info@hnb.lk இற்கு அனுப்பிவைக்காத பட்சத்தில் அல்லது வேறு பதிலீட்டாளா் விண்ணப்பத்தை சமர்ப்பிக்காதவிடத்து ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட அறிவித்தல் செல்லுபடியானதாக எடுத்துக்கொள்ளப்படும்.

(7) நிகழ்ச்சி நிரல் விடயங்களில் தமது விருப்பம் குறித்து ஒரு சுயாதீன இயக்குநரை தமது பதிலீட்டாளராக நியமிப்பதை இயக்குநர் சபை ஊக்குவிக்கிறது. பங்குதாரர்கள் சரீர ரீதியாகப் பங்கேற்க வேண்டுமானால் நாட்டில் நிலவும் சூழ்நிலை காரணமாக ஏற்படக்கூடிய சுகாதாரப் பிரச்சனைகளை தவிர்ப்பதற்கே இந்த ஏற்பாடு.

(8) பொதுக் கூட்டத்தில் சரீர ரீதியாகவோ அல்லது ஒலி அல்லது ஒலி மற்றும் காட்சி வழிமுறைகள் மூலமாகவோ பங்கேற்க முடியாத பங்குதாரர்கள் தங்கள் வினாக்கள் ஏதேனும் இருப்பின் கூட்ட நேரத்திற்கு முன்னதாக info@hnb.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கலாம். அதற்கான பதில்கள் பொதுக்கூட்டத்தின் பின்னர் உடனடியாக HNB வலைத்தளத்தில் மற்றும் கொழும்பு பங்குசந்தையின் வலைத்தளத்தில் பதிவேற்றப்பட்டு பிரசுரிக்கப்படும்.

**B. 2007 ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் உரிய ஏற்பாடுகள் மற்றும் நிறுவன அமைப்பக விதிகள்**

(1) 2007 ஆம் இலக்க கம்பனிகள் சட்ட விதிமுறை அடிப்படையில் ஒரு கம்பனியின் வருடாந்த பொதுக்கூட்டம் இருப்புநிலை திகதியிலிருந்து ஆறு மாதங்களுக்குள் நடத்தப்படவேண்டும். ஒரு குறிப்பிட்ட ஆண்டிற்கான வருடாந்த பொதுக்கூட்டம் முந்தைய வருடாந்த பொதுக்கூட்டத்தில் இருந்து 15 மாதங்களுக்குப் பிந்தாமல் நடத்தப்படவேண்டும் என்று கம்பனிகள் சட்டம் மேலும் கூறுகிறது. வங்கியின் கடைசி வருடாந்த பொதுக்கூட்டம் 2019 மார்ச் 29 ஆம் திகதி நடைபெற்றது.

(2) அதன்படி கம்பனிகள் சட்டப்பிரகாரம் 2020 ஆம் ஆண்டுக்கான வங்கியின் வருடாந்த பொதுக்கூட்டம் 2020 ஜூன் 29 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் நடத்தப்படவேண்டும். ஆகவே சட்டக் கண்ணோட்டத்தில் 51 ஆவது வருடாந்த பொதுக்கூட்டத்தை நடத்த வங்கிக்கு 2020 ஜூன் 29 ஆம் திகதி வரை கால அவகாசம் உள்ளது.

(3) நிறுவன அமைப்பக விதிகள் பிரிவு 20(ii) இன் பிரகாரம் பங்குதாரர்களின் கூட்டத்திற்கான கோரம் ஆனது நேரில் அல்லது பதிலீட்டாளர் மூலம் அல்லது வேறு வழியிலோ வங்கியின் பங்குக்கூறுகளில் 20 சதவீதத்திற்கு குறையாத பங்குக்கூறுகளை வைத்திருக்கும் 10 பங்குதாரர்கள் ஆகும்.

**C. லாபப்பங்கு கொடுப்பனவு**

(1) முன்மொழியப்பட்ட இறுதிப் பங்குலாபத் தொகையை செலுத்தும் நோக்கத்திற்காக, “பங்குலாபத்துக்கு உரித்தான திகதி” ஆனது 2020 மே 20 ஆகும் என்பதுடன் “முன்னைய பங்குலாபத் திகதி” ஆனது 2020 ஜூன் 01 ஆகும். மேற்குறித்த திகதிகள் தொடர்பில் ஏதாவது மாற்றங்கள் இருப்பின் உரிய காலத்தில் அறிவிக்கப்படும்.

(2) 05.03.2020 திகதியிடப்பட்ட பங்குதாரர்களுக்கான சுற்றறிக்கையிலுள்ள சகல ஏற்பாடுகளும் பங்குதாரர்களினால் அங்கீகரிக்கப்பட்டால் முன்மொழியப்பட்ட ரொக்கப்பணம் மற்றும் பங்குச் சான்றிதழ் பங்குலாபம் ஆகியனவற்றுக்கு பொருந்தும்.

(3) அஞ்சல் சேவையில் ஏற்படும் ஏதாவது தடங்கல் காரணமாக தமது கணக்கு இலக்கம் அல்லது பங்குலாப அறிவுறுத்தல்களை வழங்காத பங்குதாரர்கள் அருகிலுள்ள HNB கிளை அலுவலகத்திற்கு சென்று பங்குலாப ரொக்கப்பணத்தை காசோலை மூலம் பெறமுடியும். அத்தகைய பங்குதாரர்கள் தமது அடையாள மற்றும் முகவரி சரிபார்ப்பு விபரங்களை காண்பித்து அவர்களுக்கு வங்கி உத்தியோகத்தர்கள் காசோலைகளை வழங்க இயலச்செய்ய வேண்டும். ஆயினும் அஞ்சல் சேவைகள் வழமைக்கு திரும்பின் அவ்வாறான சகல பங்குலாபங்களும் அஞ்சலில் சேர்க்கப்படும்.

**D. 2020 மார்ச் 30 ஆம் திகதிக்கு திட்டமிடப்பட்ட வருடாந்த பொதுச்சபைக் கூட்ட அறிவிப்பு**

ஏற்கனவே உங்களிடம் இருக்கும் 2020 பெப்ரவரி 20 திகதியிடப்பட்ட வருடாந்த பொதுச்சபைக் கூட்ட அறிவிப்பை இந்த குறைநிரப்பு துணை அறிவிப்புடன் சேர்த்து வாசிக்கவும்.

2020 பெப்ரவரி 20 திகதியிடப்பட்ட வருடாந்த பொதுச்சபைக் கூட்ட அறிவிப்பு அதிலுள்ள நேரம் திகதி மற்றும் வருகை வணிக செயல்பாடுகள் நடத்தை தொடர்பான முறைகள் மட்டுமே இந்த குறைநிரப்பு துணை அறிவிப்பால் திருத்தப்பட்டிருக்கிறது.

ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சி சபையின் கட்டளைப்படி

**கே.ஏ.எல். துஷாரி ரணவீர (திருமதி)**
**பிரதிப் பொது முகாமையாளர் (சட்டம்)/சபைச் செயலாளர்**

23 ஏப்ரல் 2020

குறிப்பு: இந்த சுற்றறிக்கை தொடர்பாக வினவல்கள் எதுவும் இருப்பின், தயவு செய்து (செல்வி) ஷிரோமி ஹலோலுவ (சட்டத்துறை தலைவர்) 0094 1126 618 56 (திருமதி) சிந்தா பர்ணாண்டோ 0094 1126 619 38 (திருமதி) சுவர்ணி லியனபத்திரன 0094 1126 619 41 ஆகிய இலக்கங்களுடன் வழமையான காரியாலய நேரங்களில் (காலை 8.30 முதல் மாலை 5.30 வரை) தொடர்பு கொள்ளவும்.

உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி

பிச் ரேட்டிங் AA-(lka)
ஹற்றன் நஷனல் வங்கி, இலங்கை மத்திய வங்கியினால் உரிமம் அளிக்கப்பட்டு, மேற்பார்வை செய்யப்படும் ஒரு வர்த்தக வங்கி. Hatton National Bank PLC - PQ 82